Crl.Misc.40.

**EXAMINATION OF THE ACCUSED**

(Section 281, Code of Criminal Procedure)

\- - - - - - -

IN THE COURT OF

Calendar .. ..

Miscellaneous .. .. STC 805 of 2024

Preliminary Register .. ..

STATEMENT OF ACCUSED

Name : தமிழ்மணி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Date : 30-06-2025

Questions : எதிரியாகிய நீர் புகார்தாரரிடம் நன்கு தெரிந்தவர் என்ற அடிப்படையில் அவசர குடும்ப தேவைக்காகவும், பல்வேறு கடன்களை அடைப்பதற்காகவும் 06.07.2024ம் தேதி ரூ.5,00,000/- ஐ புகார்தாரரிடம் கடனாக பெற்றுக்கொண்டு அதே தேதியில் ஒரு உறுதிமொழி பத்திரத்தை நிறைவேற்றியதாகவும், மேற்படி தொகையை 12% வட்டியுடன் 3 மாதத்தில் திருப்பி கொடுத்துவிடுவதாக கூறியதாகவும், எதிரியாகிய நீர் புகார்தாரரிடம் மேற்படி கடன்தொகைக்கு ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, திருமங்கலம் கிளையில், 07.10.2024ம் தேதியிட்ட காசோலை எண்.787581 கொண்ட காசோலையை புகார்தாரரின் பெயருக்கு ஆதரவாக ரூ.5,00,000/-க்கு வழங்கிவிட்டு மேற்படி உறுதிமொழி பத்திரத்தை பெற்றுக்கொண்டதாகவும், புகார்தாரர் மேற்படி காசோலையை 07.10.2024ம் தேதி அவருடைய வங்கி கணக்கு உள்ள DBS Bank. India Ltd, Sattur Branch-ல் வசூலுக்கு செலுத்திய போது " Insufficient Funds " என்று 08.10.2024 அன்று திருப்பப்பட்டு விட்டதாகவும், இதனால் புகார்தாரர் அவருடைய வழங்கறிஞர் மூலம் 10.10.2024ம் தேதி எதிரியாகிய உமக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், 15.10.2024ம் தேதி மேற்படி அறிவிப்பை எதிரியாகிய நீர் பெற்றுக்கொண்டதாகவும், எதிரியாகிய நீர் உமது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று நன்கு தெரிந்து கொண்டு மேற்படி காசேலையை வங்கியில் பணம் உள்ளது என்று கூறி வேண்டுமென்றே கெட்ட எண்ணத்தில் சட்ட விரோதமாக வசூலுக்கு தாக்கல் செய்ய சொல்லி உள்ள குற்றத்திற்காக உம்மீது மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 & 142ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளாரே, அது பற்றி நீர் கூறும் முகாந்திரம் என்ன? நீர் என்ன குற்றவாளியா? இல்லையா? நீர் என்ன சொல்கிறீர்?

Answers : வாதி செல்வ கணேஷ், முருகேஸ்வரி ஆகிய இருவருக்கும் தான் பணம் கொடுத்துள்ளார். அந்த பணத்திற்கு G-Pay மூலமாக அவர்கள் இருவரும் வட்டி செலுத்தி வந்துள்ளார்கள். 2022ம் ஆண்டு முதல் 3 பைசா வட்டி செலுத்தினார்கள். அந்த இரண்டு நபர்களும் 2022ம் ஆண்டு வாங்கிய மேற்படி பணத்திற்கு என்னுடைய காசோலையை பிணையமாக கொடுத்தேன். வட்டி கொடுப்பதை நிறுத்திய உடன் என் காசோலையை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.